அக்டோபர்
.... 2019

விண்மீன்.காம்

# நான்காவது வார நடப்பு நிகழ்வுகள்

22 அக்டோபர் – 31 அக்டோபர்

www.winmeen.com

# நடப்பு நிகழ்வுகள்

**1.சேவாங் ரிஞ்சேன் சேது அமைந்துள்ள நகரம் எது?**

A) ஷில்லாங்

B) கேங்டாக்

**C) இலடாக் ☑**

D) டார்ஜீலிங்



✓ ஜம்மு – காஷ்மீர் மாநிலம் இலடாக்கின் கிழக்குப்பகுதியில் ஷியோக் ஆற்றின் குறுக்கே 1400 அடி நீளத்தில் கட்டப்பட்டுள்ள கர்னல் சேவாங் ரிஞ்சேன் பாலத்தை இராஜ்நாத் சிங் திறந்து வைத்தார். இலடாக் பகுதியைச் சேர்ந்த 2 முறை மகா வீர் சக்ரா விருது வென்ற மறைந்த இராணுவ அதிகாரியான சேவாங் ரிஞ்சேனின் பெயரில் இப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இலடாக்கில் உள்ள துர்புக் பகுதிக்கும் தௌலத் பேக் ஓல்டி பகுதிக்கும் இடையே, சீனாவுடனான எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு 45 கி.மீ தொலைவில் இந்தப் பாலத்தை எல்லைச் சாலைகள் அமைப்பு கட்டியுள்ளது.

✓ நவீன 'மைக்ரோ பைல்' தொழில்நுட்பத்தைக் கொண்டு இது கட்டப்பட்டுள்ளது. ஆசியாவிலேயே இந்தத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவது இதுவே முதல்முறை. இப்பாலம் கடல் மட்டத்தில் இருந்து 14,650 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

**2.இந்தோனேசியாவின் புதிய அதிபராக பதவியேற்றுள்ளவர் யார்?**

A) சுசிலோ யுதோயோனோ

B) ஜூசுப் கல்லா

C) மருப் அமீன்

**D) ஜோகோ விடோடோ (Joko Widodo) ☑**



✓ இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோ, இரண்டாவது தவணைக்கும் இறுதி ஐந்தாண்டு காலத்துக்குமாக இந்தோனேசிய அதிபராக ஜகார்த்தாவில் பதவியேற்றார். பாதுகாப்பு, ஊழல் மற்றும் பொருளாதார மந்தநிலைகளைச் சுற்றியுள்ள புதிய சவால்களை கையாள்வதற்காக துணிச்சலான நடவடிக்கைகளை எடுப்பதாக அவர் உறுதியளித்துள்ளார். கடந்த ஏப்ரலில் நடந்த அதிபர் தேர்தலில், 55.5% வாக்குகளைப் பெற்று விடோடோ வெற்றி பெற்றார்.

**3.அனைத்து அரசுப் பள்ளிகளிலும் 9 மற்றும் 10ஆம் வகுப்புகளில் NCERT பாடத்திட்டத்தைப் பின்பற்ற முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?**

A) ஹிமாசல பிரதேசம்


**B) மத்திய பிரதேசம் ☑**

C) இராஜஸ்தான்

D) ஹரியானா

- ✓ அடுத்த கல்வியாண்டிலிருந்து மாநிலத்தின் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் 9 மற்றும் 10ஆம் வகுப்பில் NCERT பாடத்திட்டத்தைப் பின்பற்ற மத்திய பிரதேச மாநில அரசு முடிவுசெய்துள்ளது. அரசுப் பள்ளிகளில் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்காக, 'பெற்றோர்–ஆசிரியர் சங்கக் கூட்டங்கள்' ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒருமுறை நடத்தப்படும் என அம்மாநிலத்தின் பள்ளிக்கல்வி அமைச்சர் Dr. பிரபுராம் சௌத்ரி தெரிவித்துள்ளார்.
- ✓ அதில், பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களின் கல்வி மற்றும் அவர்களின் பிரச்சனைகள் குறித்து வெளிப்படையான கலந்துரையாடலை மேற்கொள்வார்கள். ஆசிரியர்கள் தங்கள் வசதிக்கு ஏற்ப இடமாற்றம் செய்துகொள்ளும் நடைமுறை வழக்கம் ஆன்லைனில் தொடங்கப்பட்டுள்ள நாட்டின் முதல் மாநிலம் மத்தியப் பிரதேசம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

**4.அண்மையில் காலமான KB சித்தையா, எந்தத் துறைசார்ந்தவராவார்?**



**A) கவிதை ☑**

B) இதழியல்

C) அரசியல்

D) கலை

- ✓ சமூக அரசியல் தத்துவவாதியும் எழுத்தாளருமான KB சித்தையா (65), பெங்களூருவில் காலமானார். எண்பதுகளில் தலித சங்கர்ஷா சமிதியின் நிறுவன உறுப்பினர்களுள் ஒருவராக இருந்த அவர், அந்த இயக்கத்தை ஊக்குவிப்பதற்காக பல கவிகளை பல்வேறு ஆசிரியர்களுடன் இணைந்து எழுதியுள்ளார். அவர், ஞானபீட விருது பெற்ற Dr. U R அனந்தமூர்த்தி மற்றும் விமர்சகர் கி ராம் நாகராஜ் ஆகியோரின் சீடராக இருந்தார்.

**5.இந்திய வங்கிகள் சங்கத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**




A) இராகேஷ் சர்மா

**B) இரஜ்னிஷ் குமார் ☑**

C) S மல்லிகார்ஜுனா ராவ்

D) மாதவ் கல்யாண்

- ✓ பாரத ஸ்டேட் வங்கியின் தலைவர் இரஜ்னிஷ் குமார், இந்திய வங்கிகள் சங்கத்தின் 2019–20ஆம் ஆண்டுக்கான தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். பஞ்சாப் தேசிய வங்கியின் (PNB) மேலாண்மை இயக்குநரும் (MD) தலைமைச் செயல் அதிகாரியுமான (CEO) சுனில் மேத்தாவுக்குப் பிறகு அவர் இந்தப் பதவிக்கு வந்துள்ளார். இந்திய வங்கிகள் சங்கமானது அரசாங்கம் மற்றும் ஒழுங்காற்றுநர்களிடத்தில் வங்கிகளின் விருப்பங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

**6. நடப்பாண்டில் புரோ கபடி லீக் (PKL) பட்டத்தை வென்ற அணி எது?**

A) யு மும்பா


B) பாட்னா பைரேட்ஸ்

**C) பெங்கால் வாரியர்ஸ் ☑**

D) தபாங் தில்லி

✓ விவோ புரோ கபடி லீக்–2019 7ஆவது சீசன் போட்டியில் முதன்முறையாக சாம்பியன் பட்டம் வென்றது பெங்கால் வாரியர்ஸ். அகமதாபாத்தில் உள்ள EKA அரங்கில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் தபாங் தில்லி அணியை 39–34 என்ற புள்ளிக்கணக்கில் வென்றது பெங்கால் வாரியர்ஸ்.

**7. 'Bridgital Nation' என்னும் நூலை எழுதிய N சந்திரசேகரன், எந்த நிறுவனத்தின் தலைவராக உள்ளார்?**




A) இன்போசிஸ்

**B) டாடா சன்ஸ் ☑**

C) விப்ரோ

D) பிர்லா

✓ பிரதமர் மோடி, அண்மையில், புதுதில்லியல், 'பிரிட்ஜிடல் நேஷன்' என்னும் நூலை வெளியிட்டார். இந்நூல், N சந்திரசேகரன் மற்றும் ரூபா புருஷோத்தமன் ஆகியோரால் எழுதப்பட்டுள்ளது. மக்களும், தொழில்நுட்பமும் ஒன்றுடன் ஒன்றிணைந்து பரஸ்பரம் பயன்பெறும் சுற்றுச்சூழல் குறித்த வலுவான எதிர்கால தொலைநோக்கை இந்நூல் கொண்டுள்ளது.

**8. 2019 ஆசிய டிராக் மிதிவண்டி ஓட்டுதல் சாம்பியன்ஷிப்பின் ஆடவர் ஜூனியர் கியர்ன் நிகழ்வில் (Keirin event), தங்கம் வென்ற இந்திய மிதிவண்டி ஓட்டுநர் யார்?**




A) ஜேம்ஸ் சிங்

**B) ரொனால்டோ சிங் ☑**

C) ரோஜித் சிங்

D) ஈசோ ஆல்பன்

✓ தென்கொரியாவின் இஞ்சியோனில் நடந்த 2019 ஆசிய டிராக் மிதிவண்டி ஓட்டுதல் சாம்பியன்ஷிப் போட்டியின் ஆடவர் ஜூனியர் கியர்ன் நிகழ்வில் இந்திய மிதிவண்டி ஓட்டுநர் ரொனால்டோ சிங் தங்கப்பதக்கம் வென்றார். அதே நிகழ்வில், ஜேம்ஸ் சிங் வெண்கலப்பதக்கத்தை வென்றார். அத்துடன் ஆண்கள் & பெண்கள் ஜூனியர் ஸ்பிரிண்ட் அணியில் இந்தியா 2 வெண்கலங்களையும் வென்றது.

**9.அணிசேரா இயக்கத்தின் 18ஆவது உச்சிமாநாடு நடைபெறவுள்ள நகரம் எது?**

**A) பாகு ☑**

B) புது தில்லி

C) கோலாலம்பூர்

D) பாங்காக்




✓ அக்.25–26 வரை அசர்பைஜானின் தலைநகரமான பாகுவில், அணிசேரா இயக்கத்தின் (Non – Aligned Movement) தலைவர்கள் பங்கேற்கும் 18ஆவது உச்சிமாநாடு நடைபெறவுள்ளது. அணிசேரா இயக்கம் என்பது எந்தவொரு அதிகார மையத்தின் சார்பாகவோ எதிராகவோ அணிசேராத நாடுகளின் குழுமம் ஆகும். இதில், 120 வளரும் நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

✓ இந்த இயக்கம், 1961ஆம் ஆண்டு பெல்கிரேட்டில் உருவானது. யுகோசுலாவியாவின் அதிபராக இருந்த ஜோசிப் புரோஸ் டிடோ, இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு ஆகியோரின் கருத்தாக்கத்தில் இந்த இயக்கம் தொடங்கப்பட்டது. இது, காலனித்துவ அமைப்பு சரியத் தொடங்கி காலகட்டத்தில், ஆப்பிரிக்கா, ஆசியா, இலத்தீன் அமெரிக்கா மற்றும் உலகின் பிற பிராந்தியங்களில் விடுதலைப் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், பனிப்போர் உச்சம் பெற்றிருந்த சமயத்தில் நிறுவப்பட்டதாகும்.

**10. EKUVERIN–2019 என்னும் இந்தியா–மாலத்தீவுக்கு இடையேயான கூட்டு இராணுவப் பயிற்சியானது எந்த நகரத்தில் நடந்து முடிந்துள்ளது?**

A) கொச்சின்

B) விசாகப்பட்டினம்

**C) புனே ☑**

D) பெங்களூரு




✓ இந்தியா–மாலத்தீவுக்கு இடையேயான 'EKUVERI–2019' என்னும் கூட்டு இராணுவப் பயிற்சியானது அண்மையில், புனேவில் உள்ள ஆந்த் இராணுவ நிலையத்தின் வெளிநாட்டு பயிற்சி முனையத்தில் நிறைவடைந்தது. ஐ.நாவின் ஆணைப்படி அரை–நகர்ப்புற சூழலில் கிளர்ச்சி மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் கூட்டுப் பயிற்சி அளித்தல், இரு குழுக்களுக்கும் இடையே இயங்குதன்மை மற்றும் ஒத்திசைவு ஆகியவற்றை வளர்த்தல் உள்ளிட்டவை இந்த 14 நாள் பயிற்சியில் அடங்கும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.எந்தத் தீவில், உலகின் பழமையான இயற்கை முத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது?**



A) ராஸ் அல் கைமா

B) உம் அல் கைவைன்

**C) அபுதாபி ☑**

D) ஷார்ஜா

✓ அபுதாபியின் கரையோரத்தில் உள்ள மாராவா தீவில் உள்ள ஒரு புதிய கற்கால தளத்தில் பணிபுரிந்து வரும் அபுதாபி தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால், உலகின் பழமையான இயற்கை முத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த முத்து, 'அபுதாபி முத்து' என்று அழைக்கப்படுகிறது. புதிய கற்காலத்தில், பொ.ஆ.மு 5800 – 5600 தேதியிட்ட கதிர்க்கரிம அடுக்குகளில் இது காணப்பட்டது.

✓ இந்தக் கண்டுபிடிப்பு, கிட்டத்தட்ட 8000 ஆண்டுகளுக்கு முன்பு ஐக்கிய அரபு அமீரகத்தில் முத்துக்கள் & சிப்பிகள் பயன்படுத்தப்பட்டன என்பதற்கான ஒரு சான்றாக உள்ளது. 'அபுதாபி முத்து' கண்டறிவதற்கு முன்னர், ஐக்கிய அரபு அமீரகத்தில் உம் அல் கைவைனில் உள்ள ஒரு புதிய கற்கால தளத்திலிருந்து முதன்முதலில் முத்து கண்டறியப்பட்டது.

**2.எந்த நாட்டின் ஆராய்ச்சியாளர்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேமிப்பு சாதனத்தை உருவாக்கியுள்ளனர்?**



**A) ஐக்கிய பேரரசு (UK) ☑**

B) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

C) பிரான்ஸ்

D) ஜெர்மனி

✓ இலண்டனின் குயின் மேரி நிறுவனத்தைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள், ஒரு புதிய மின்கடத்தா மின்தேக்கியை உருவாக்கியுள்ளனர். பிரெஞ்சு தின்பண்ட மாதிரியில் உள்ள இது, மின்கலம் போன்ற ஆற்றலைச் சேமிக்கும் ஒரு சாதனமாகும். மாவை பல்லடுக்குகளாக மடிப்பதன் மூலம் அந்தக் குறிப்பிட்ட தின்பண்டம் தயாரிக்கப்படுகிறது. அதுபோல, பாலிமர் படல மின்தேக்கியை அழுத்தி மடிப்பதன் மூலம், வணிகரீதியாக தற்போது சந்தைகளில் கிடைக்கக்கூடிய மின்கடத்தா மின்தேக்கியை விட, 30 மடங்கு அதிக ஆற்றலை சேமிக்க முடிந்தது என்பதை அவர்கள் கண்டறிந்தனர்.

✓ பாலிமர் படல மின்தேக்கியில் இதுவரை அறிவிக்கப்பட்ட மிக உயர்ந்த ஆற்றல் அடர்த்தி இதுவாகும். இந்நவீன கண்டுபிடிப்பானது காற்று மற்றும் சூரிய மூலங்களுக்கான திறமையான, குறைந்த விலை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்சார ஆற்றல் சேமிப்பு அமைப்புகளுக்கு வழிவகுக்கக்கூடும். இந்த நுட்பத்துடன், புதுப்பிக்கத்தக்க ஆற்றலை அதிக அளவில் சேமிக்க முடியும்.

**3. 'இந்தியாவில் குற்றம்–2017' அறிக்கையின்படி, எந்த மாநிலத்தில் பெண்களுக்கு எதிராக அதிக எண்ணிக்கையிலான குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது?**

A) மத்திய பிரதேசம்

**B) உத்தர பிரதேசம் ☑**

C) இராஜஸ்தான்

D) பீகார்




✓ 'இந்தியாவில் குற்றம்–2017' என்னும் அறிக்கையை சமீபத்தில் தேசிய குற்றப்பதிவேடு பணியகம் வெளியிட்டுள்ளது. 2017ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிராக 3.59 லட்சம் குற்றங்கள் பதிவாகியுள்ள நிலையில், நாட்டின் மோசமான சட்ட–ஒழுங்கு நிலைமையை இந்தப் புள்ளிவிவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. 2017ஆம் ஆண்டில் 56,011 வழக்குகளுடன் பெண்களுக்கு எதிரான அதிகபட்ச குற்றங்களை உத்தரபிரதேச மாநிலம் பதிவு செய்துள்ளது.

✓ அதனைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (31,979), மேற்கு வங்கம் ( 30,992), மத்திய பிரதேசம் (29,778), இராஜஸ்தான் (25,993), அஸ்ஸாம் (23,082) ஆகிய மாநிலங்கள் உள்ளன. 'பெண்களுக்கு எதிரான குற்றம்' என்பதன் வரையறை கொலை, வன்புணர்வு, மணக்கொடையால் ஏற்படும் மரணம், தற்கொலை செய்துகொள்ளுதல், அமிலத்தாக்குதல், பெண்களுக்கு எதிரான கொடுமை மற்றும் கடத்தல் ஆகியவை அடங்கும்.

✓ 2017ஆம் ஆண்டில் நாட்டில் மிக அதிகமான குற்ற விகிதத்தை (143) அஸ்ஸாம் மாநிலம் பதிவு செய்துள்ளது. குற்ற விகிதம் என்பது ஒரு இலட்சம் பேருக்கு எத்தனை பேர் குற்றம் செய்துள்ளனர் என்பது குறித்ததாகும். ஒடிசா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் இந்த விகிதம் தலா 94 என உள்ளன. இது, ஹரியானாவில் 88 எனவும், இராஜஸ்தானில் 73 எனவும் உள்ளது.

**4. உலக அயோடின் பற்றாக்குறை நாள் அனுசரிக்கப்படும் தேதி எது?**

A) அக்டோபர் 20

B) அக்டோபர் 23

**C) அக்டோபர் 21 ☑**

D) அக்டோபர் 22



✓ அயோடின் பற்றாக்குறை குறித்தும் மூளை வளர்ச்சியில் அதன் பாதிப்புகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.21 அன்று உலக அயோடின் பற்றாக்குறை நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. அயோடின் என்பது இயல்பான தைராய்டு செயல்பாடு, மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான ஒரு நுண்ணூட்டச்சத்து ஆகும். இதன் குறைபாடு, தடுக்கக்கூடிய மனநோய் பாதிப்புக்கு ஒரு முக்கிய காரணியாக உள்ளது.

**5. நடப்பாண்டில், 'வோக் விளையாட்டு ஆளுமை' விருதை வென்ற இந்திய விளையாட்டு வீரர் அல்லது வீராங்கனை யார்?**



**A) டூட்டி சந்த் ☑**

B) P V சிந்து

C) மேரி கோம்

D) மிதாலி ராஜ்

✓ "Vogue Women of the Year" விருதுகளின் 3ஆவது பதிப்பில், இந்திய ஸ்ப்ரிண்டர் டூட்டி சந்த் 2019ஆம் ஆண்டின் 'வோக் விளையாட்டு ஆளுமை' விருதை வென்றுள்ளார். மதிப்புமிக்க இந்த விருதை வென்றதோடு மட்டுமல்லாமல், வோக் இந்தியாவின் நவம்பர் 2019 பதிப்பின் அட்டைப்படத்திலும் டூட்டி இடம்பெறவுள்ளார். அக்.11 அன்று இராஞ்சியில் நடந்த தேசிய ஓப்பன் தடகள சாம்பியன்ஷிப் போட்டியின் 100 மீ ஓட்டப்பந்தயத்தில், டூட்டி சந்த், தேசிய சாதனையை முறியடித்தது குறிப்பிடத்தக்கது. அவர், நாட்டின் முதல் வெளிப்படையான ஓரினச்சேர்க்கை விளையாட்டு ஆளுமையாக கருதப்படுகிறார்.

**6. எந்த நகரத்தில், நெல் வைக்கோலை அழுத்தப்பட்ட உயிரிவாயுவாக (Compressed Bio-Gas) மாற்றும் இந்தியாவின் முதல் ஆலை வரவுள்ளது?**



A) உதய்பூர்

**B) கர்னல் ☑**

C) ஜபல்பூர்

D) நாக்பூர்

✓ நெல் வைக்கோலை அழுத்தப்பட்ட உயிரி எரிவாயுவாக (CBG) மாற்றும் இந்தியாவின் முதல் ஆலை, ஹரியானா மாநிலம் கர்னலில் உள்ள கராண்டா கிராமத்தில் அமையவுள்ளது. இந்திரா இந்திரபிரஸ்தா எரிவாயு நிறுவனத்தின் (IGL) ஆலையில் உருவாக்கப்படும் இந்த உயிரி எரிவாயு, வாகனங்களில் CNG ஆகவும், சமையல் எரிவாயுவாகவும் பயன்படுத்தப்படும்.

✓ இந்த ஆலை, 2020ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் நிறைவடையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது, ஆண்டொன்றுக்கு 20,000 ஏக்கரிலிருந்து உற்பத்தி செய்யப்படும் வைக்கோல்களை எரிவாயுவாக மாற்றும் திறன் கொண்டதாக இருக்கும். இந்த அலகு, அஜய் பயோ எனர்ஜி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால், பெட்ரோலியம் & இயற்கை எரிவாயு அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட CBG குறித்த 'SATAT' (Sustainable Alternative Towards Affordable Transportation) திட்டத்தின் கீழ் நிறுவப்படும்.

**7. நடப்பாண்டில் வரும் உலக எலும்புத்துளை நோய் (Osteoporosis) நாளுக்கான கருப்பொருள் என்ன?**

A) Strong Women Make Stronger Women

B) Stop at One: Make your First Break your Last

**C) Love your bones and protect your future ☑**

D) Real Men Build Their Strength from Within




✓ எலும்புத்துளை நோய் மற்றும் வளர்சிதை மாற்ற எலும்பு நோய்களைத் தடுப்பது, கண்டறிவது மற்றும் சிகிச்சையளிப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சர்வதேச எலும்புத்துளை நோய் அறக்கட்டளையானது ஒவ்வோர் ஆண்டும் அக்.20 அன்று உலக எலும்புத்துளை நோய் நாளை அனுசரித்துவருகிறது. "உங்கள் எலும்புகளை நேசிக்கவும், உங்கள் எதிர்காலத்தைப் பாதுகாக்கவும்" என்பது நடப்பாண்டில் (2019) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

**8. இந்தியாவில் உள்ள பசி மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டிற்கு எதிராக 'Feed our Future' என்னுமொரு பரப்புரையைத் தொடங்கியுள்ள ஐ.நா அமைப்பு எது?**

A) UNESCO

**B) WFP ☑**

C) FAO

D) UNIDO

✓ நடப்பாண்டு உலக உணவு நாளை முன்னிட்டு, ஐ.நா அவையின் உலக உணவுத் திட்டமானது 'Feed our Future' என்ற தனது திரையரங்க பரப்புரையை UFO மூவிஸின் ஆதரவுடன் தொடங்கியுள்ளது. இது, இந்தியாவில், திரைப்பட பார்வையாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு உதவும். மேலும், பசியற்ற ஓர் உலகத்தை உருவாக்குவதற்கான பணியையும் மேற்கொள்ளும்.

✓ இந்தப் புதிய பரப்புரை, கடந்த ஆண்டைப் போலவே வெற்றிகரமான முடிவுகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, சென்ற ஆண்டில் விளம்பரத்தைப் பார்த்தவர்களிடையே உலக உணவுத் திட்டம் பற்றிய விழிப்புணர்வை இரட்டிப்பாக்க இது உதவியது. இணையவழி நிதி சேகரிப்பின் மூலம் அரை மில்லியனுக்கும் அதிகமான டாலர்களை இது திரட்டியது. #ShareTheMeal என்னும் நன்கொடை செயலியின் பதிவிறக்கமும் 38% இதன்மூலம் அதிகரித்தது.

**9. 2021 முதல் இரண்டுக்கும் மேற்பட்ட குழந்தைகளைக் கொண்டவர்களுக்கு எந்த அரசு வேலையும் கொடுக்கப்படாது என முடிவு செய்துள்ள மாநில அரசு எது?**

A) இராஜஸ்தான் B) பஞ்சாப்

C) ஜார்க்கண்ட் **D) அஸ்ஸாம் ☑**

অসম চৰকাৰ

সত্যমেব জয়তে

GOVERNMENT OF ASSAM

- ✓ 126 உறுப்பினர்களைக்கொண்ட அஸ்ஸாம் சட்டமன்றம், ஒரு "மக்கள்தொகை மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் கொள்கை"யை ஏற்றுக்கொண்டுள்ளது. சிறிய குடும்பம் விதிமுறைகளின்படி 2021 ஜன.1 முதல் அமலுக்கு வரும் இந்தக் கொள்கையின் மூலம் இரண்டுக்கும் மேற்பட்ட குழந்தைகளைக் கொண்ட மக்களுக்கு அரசு வேலை எதுவும் வழங்கப்படாது.

**10.பாரம்பரிய மருத்துவத்தை வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சகத்துடன் ஒப்பந்தம் செய்துள்ள மத்திய அமைச்சகம் எது?**

**A) ஆயுஷ் அமைச்சகம் ☑**

B) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

C) வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம்

D) சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம்



- ✓ ஆயுதப்படை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் பாரம்பரிய மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக மத்திய ஆயுஷ் அமைச்சகமானது பாதுகாப்பு அமைச்சகத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், இராணுவ ஆராய்ச்சி மற்றும் பரிந்துரை மருத்துவமனை, வான்படை மருத்துவமனை, காசியாபாத்தில் உள்ள ஹிண்டன் மற்றும் தில்லியில் கண்டறியப்பட்ட 5 முன்னாள் இராணுவத்தினர் பங்களிப்பு சுகாதார திட்டம் உள்ள பல்நோய் மருத்துவமனைகள் ஆகிய இடங்களில் உள்ள நோய்த்தடுப்பு சிகிச்சை மையங்களில் ஆயுர்வேத அலகுகள் நிறுவப்படும்.

## நடப்பு நிகழ்வுகள்

**1. சர்வதேச பனிச்சிறுத்தை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டத்தின் (GSLEP) நடப்பாண்டு உச்சிமாநாடு நடைபெற்ற நகரம் எது?**



A) டேராடூன்

B) சிம்லா

C) டார்ஜீலிங்

**D) தில்லி ☑**

✓ நடப்பாண்டு (2019) சர்வதேச பனிச்சிறுத்தை நாளை முன்னிட்டு, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், இந்தியாவில், பனிச்சிறுத்தை எண்ணிக்கையை கணக்கிடுவதற்கான முதல் தேசிய திட்டத்தைத் தொடங்கிவைத்தார். தில்லியில் நடைபெற்ற சர்வதேச பனிச்சிறுத்தை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டத்தின் 4ஆவது வழிநடத்தல் குழு கூட்டத்தின் தொடக்க அமர்வில் இது தொடங்கப்பட்டது.

✓ பனிச்சிறுத்தைகளுக்கு வேட்டையாடுதல் ஒரு பெரிய அச்சுறுத்தலாக உள்ளது. 'பனிச்சிறுத்தை திட்டம்' என்பது சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் ஒரு முன்னெடுப்பாகும். இது, பங்கேற்பு கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் மூலம் பாதுகாப்பை அதிகரித்து, அதிக உயரமான பகுதியில் வாழும் பனிச் சிறுத்தைகளையும் அவற்றின் வாழ்விடங்களையும் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பனிச் சிறுத்தைகள் தங்கள் சுற்றுச்சூழல் அமைப்பில் ஒரு சிறந்த வேட்டையாடிகளாக முக்கிய பங்கு வகிக்கின்றன.

**2. நடப்பாண்டில் வரும் சர்வதேச பனிச்சிறுத்தை நாளுக்கான கருப்பொருள் என்ன?**



**A) அக்டோபர் 23 ☑**

B) அக்டோபர் 26

C) அக்டோபர் 25

D) அக்டோபர் 24

✓ பனிச்சிறுத்தைகளைப் பாதுகாப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.23 அன்று சர்வதேச பனிச்சிறுத்தை நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. ஹிமாச்சல பிரதேசம், உத்தரகாண்ட், சிக்கிம், அருணாச்சல பிரதேசம், ஜம்மு மற்றும் காஷ்மீர் மற்றும் இலடாக் முழுவதும் 400–700 எண்ணிக்கையிலான பனிச்சிறுத்தை இருக்கலாம் என நம்பப்படுகிறது.

**3. இந்திய தரவு பாதுகாப்பு கவுன்சிலானது எந்தத் தேசிய துளிர்நிறுவனங்கள் களஞ்சியத்தை அறிமுகப்படுத்தியுள்ளது?**



A) டெக்பாரத் B) டெக்வாக்

**C) டெக்சாகர் ☑** D) டெக்டீ

- ✓ இந்திய தரவு பாதுகாப்பு கவுன்சிலானது தேசிய இணையவெளி பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் அலுவலகத்துடன் இணைந்து, சமீபத்தில், 'டெக்சாகர்' என்றவொரு தேசிய களஞ்சியத்தை அறிமுகம் செய்துள்ளது. இது, எதிர்காலத்தில், வணிகம் மற்றும் கல்வியாளர்கள் ஒன்றிணைந்து செயல்படுவதை, எளிதாக்குகிறது.

- ✓ இணைய உலகம் (IoT), செயற்கை நுண்ணறிவு (AI) / எந்திர கற்றல், பிளாக்செயின், மேகக்கணிமை & மெய்நிகராக்கம், ரோபாட்டிக்ஸ் & ஆட்டோமேஷன் போன்ற 25 தொழில்நுட்ப துறைகளைச் சார்ந்த நான்காயிரத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்களின் திறன்களைப் பற்றிய நுண்ணறிவுகளை 'டெக்சாகர்' வழங்குகிறது.

**4.பாஷன் சார் தீவு, எந்த நாட்டில் அமைந்துள்ளது?**



A) இந்தியா

B) இலங்கை

**C) வங்கதேசம் ☑**

D) பாகிஸ்தான்

- ✓ தோராயமாக 6000–7000 ரோகிங்கியா அகதிகள், பாஷன் சார் தீவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முகாமிற்கு புலம்பெயர ஒப்புக்கொண்டுள்ளனர். இந்தத் தீவு, தென்கிழக்கு வங்கதேசத்தில் உள்ள அதியா தீவுக்குக் கிழக்கே 30 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. சுமார் இருபதாண்டுகளுக்கு முன்பு மேக்னா ஆற்றின் முகத்துவாரத்தில் இந்தத் தீவு உருவாக்கப்பட்டது.

**5.அணிசேரா நாடுகள் அமைப்பின் அரசுத்தலைவர்கள் பங்கேற்கும் 18ஆவது உச்சிமாநாட்டில், இந்திய தூதுக்குழுவை வழிநடத்தியது யார்?**



A) நரேந்திர மோடி

B) இராம்நாத் கோவிந்த்

**C) வெங்கையா ☑**

D) இராஜ்நாத் சிங்s

- ✓ அசர்பைஜானின் பாக்கூ நகரத்தில் அக்.25–26 தேதிகளில் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகள் அமைப்பின் (NAM) அரசுத்தலைவர்கள் பங்கேற்கும் 18ஆவது உச்சிமாநாட்டில் இந்தியக் குழுவுக்கு குடியரசுத்துணைத் தலைவர் வெங்கையா தலைமைதாங்குவார்.

- ✓ "சமகால உலகின் சவால்களை எதிர்கொள்ள பாண்டுங் கோட்பாடுகளைப் பின்பற்றுவதற்கு ஒருங்கிணைந்த மற்றும் தேவையான நடவடிக்கைகளை உறுதிசெய்வது – Upholding the Bandung Principles to ensure concerted and adequate response to the challenges of the contemporary world" என்பது 18ஆவது NAM உச்சிமாநாட்டின் மையப்பொருளாகும். இந்தக் கோட்பாடுகள், உலக அமைதி மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான தேவையை கருத்தில்கொண்டு 1955ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆசிய –ஆப்பிரிக்க மாநாட்டில் வடிவமைக்கப்பட்டன.

**6.பிரதமர் மோடியின் 'பாரத் கி இலக்ஷ்மி' திட்டத்துக்கு தூதராக தேர்வு செய்யப்பட்டுள்ள இந்திய விளையாட்டு வீராங்கனை யார்?**



A) சாய்னா நேவால்

**B)** P V சிந்து ☑

C) மிதாலி ராஜ்

D) மேரி கோம்

✓ பிரதமர் மோடி தொடங்கியுள்ள 'பாரத் கி லக்ஷ்மி' பரப்புரையின் விளம்பர தூதர்களாக நடிகை தீபிகா படுகோன் மற்றும் டென்னிஸ் வீராங்கனை P V சிந்து ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர். தீபாவளி பண்டிகையையொட்டி நாடு முழுவதுமுள்ள பெண்கள் செய்துள்ள சாதனைகளை வெளிச்சத்துக்கு கொண்டுவருவதற்காக இந்தப் பரப்புரையை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கியுள்ளார்.

**7. UIDAIஇன் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளசவர் யார்?**

A) பிரகாஷ் சர்மா

**B)** பங்கஜ் குமார் ☑

C) மாயங்க் தத்

D) விஜய் குமார்

✓ இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் (UIDAI) புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக (CEO) பங்கஜ் குமார் IAS நியமிக்கப்பட்டுள்ளார். UIDAI என்பது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின்கீழ், 2016ஆம் ஆண்டு ஆதார் சட்டவிதிகளின்கீழ் நிறுவப்பட்ட ஒரு சட்டபூர்வ அமைப்பாகும். இது நகல்/போலி அடையாள அட்டை நிறுவனங்களை அகற்றுவதற்காக இந்தியாவில் வசிக்கும் அனைவருக்கும் UID/ஆதார் வழங்கவேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது.

**8.செயற்கை நுண்ணறிவு (AI) சம்பந்தமாக மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் NITI ஆகியவற்றுக்கு இடையேயான சிக்கலுக்குத் தீர்வுகாணும் குழுவின் தலைவர் யார்?**

**A)** K விஜய் ராகவன் ☑



B) S K சின்ஹா

C) ஷோபனா K பட்டநாயக்

D) தருண் ஸ்ரீதர்

✓ இந்தியாவின் இலட்சிய செயற்கை நுண்ணறிவுத் (AI) திட்டத்தை யார் செயல்படுத்துவார்கள் என்பது குறித்து NITI ஆயோக் மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ஆகியவற்றுக்கு இடையேயுள்ள வேறுபாடுகளை தீர்ப்பதற்காக இந்திய அரசு குழுவொன்றை அமைத்துள்ளது. இந்தக் குழுவுக்கு தலைமை அறிவியல் ஆலோசகர் K விஜய் ராகவன் தலைமை தாங்குவார்.

✓ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் செயலாளர், NITI ஆயோக் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் செயலாளர் ஆகியோர் அந்தக் குழுவின் பிரதிநிதிகளாக இருப்பார்கள்.

**9. 'சிந்து சுதர்சன்' என்ற பெயரில் பயிற்சி மேற்கொள்ள முடிவு செய்துள்ள இந்திய ஆயுதப்படை எது?**

A) இந்திய விமானப்படை

B) இந்திய கடற்படை

C) அஸ்ஸாம் ரைபிள்ஸ்

**D) இந்திய இராணுவம் ☑**




✓ நவ.29 முதல் டிச.4 வரை இராஜஸ்தான் பாலைவனங்களில் 'சிந்து சுதர்சன்' என்ற பெயரில் பயிற்சியை மேற்கொள்ள இந்திய இராணுவம் முடிவுசெய்துள்ளது. பாதுகாப்புப் படைகளின் திறனை மதிப்பீடு செய்வதே இந்தப் பயிற்சியின் நோக்கமாகும். 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் இந்தப் பயிற்சியில் பங்கேற்கவுள்ளனர்.

**10. தில்லியில், நீரோட்டங்கள் குறித்த சர்வதேச பயிலரங்கைத் தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

**A) ஜல் சக்தி அமைச்சகம் ☑**

B) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

C) வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம்

D) சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம்



✓ ஜல் சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத், அண்மையில் தில்லியில், நீரோட்டங்கள் (environmental flows) குறித்த சர்வதேச பயிலரங்கத்தைத் தொடங்கிவைத்தார். இந்தியாவில் நீரோட்டங்களின் மதிப்பீடு குறித்த வழிகாட்டுதல் ஆவணத்தின் முதல் பதிப்பையும் அவர் முறையாக வெளியிட்டார்.

✓ 1) இந்தியாவில் நீரோட்டங்களின் மதிப்பீட்டிற்கான ஒட்டுமொத்த நோக்கங்கள் மற்றும் இலக்குகள் யாவை?; 2) ஒட்டுமொத்த நோக்கங்களுக்கும் இலக்குகளுக்கும் ஏற்ப நீரோட்டங்களை உயிர்ப்பிக்க குறுகிய மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் யாவை? ஆகிய 2 கேள்விகளுக்கு பதிலளிப்பதன் மூலம் இந்தியாவில் நீரோட்டங்களை உயிர்ப்பிக்க உதவுவதே இந்தப் பயிலரங்கத்தின் நோக்கமாகும்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ 2017ஆம் ஆண்டு நடந்த குற்றச்சம்பவங்களின் எண்ணிக்கை தொடர்பான புள்ளிவிவர பட்டியலை தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ளது. அதில், தமிழ்நாடு ஏழாவது இடத்தைப் பிடித்துள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.கர்தார்பூர் சாகிப் வழித்தட ஒப்பந்தத்தில், இந்தியா, எந்த நாட்டுடன் கையெழுத்திட்டது?**

A) நேபாளம்

B) வங்கதேசம்

C) ஆப்கானிஸ்தான்

**D) பாகிஸ்தான் ☑**




✓ சீக்கிய மதத்தின் நிறுவனர் குருநானக் தேவின் 550ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் விதமாக, இந்தியாவும் பாகிஸ்தானும் சமீபத்தில் பன்னாட்டு எல்லையில் அமைக்கப்பட்டுள்ள கர்தார்பூர் வழித்தட திட்டத்தை செயல்படுத்துவதற்கான முக்கிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இந்த வழித்தடம், பஞ்சாப் மாநிலத்தில் உள்ள தேரா பாபா குருத்வாரா, பாகிஸ்தானின் கர்தார்பூரில் உள்ள தர்பார் சாகிப் குருத்வாரா ஆகியவற்றுக்கு இடையே உள்ள 4 கி.மீ., தொலைவை இணைக்கும்.

✓ இந்த ஒப்பந்தம் பாகிஸ்தானின் நோரோவல் மாவட்டத்தில் உள்ள குருத்வாரா தர்பார் சாகிப்புக்கு சென்றுவர அனுமதிக்கும். அங்கு, சீக்கிய மதத்தின் நிறுவனர் குருநானக் தேவ் தனது வாழ்நாளின் கடைசி 18 ஆண்டுகளை கழித்தார். இந்த ஒப்பந்தத்தின் சிறப்பம்சங்கள் பின்வருமாறு: அனைத்து மதங்களைச்சேர்ந்த இந்திய யாத்ரீகர்கள், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் இவ்வழித்தடத்தை பயன்படுத்தலாம். மேலும், கர்தார்பூர் செல்வதற்கு நுழைவு இசைவு தேவையில்லை.

**2.உலக வங்கியின், 'தொழில் தொடங்க உகந்த நாடுகள் – 2020' அறிக்கையில் இந்தியாவின் தரநிலை (rank) என்ன?**

A) 62

B) 60

C) 52

**D) 63 ☑**

63

✓ உலக வங்கியின் சமீபத்திய 'தொழில் தொடங்க உகந்த நாடுகள் – 2020' அறிக்கையின்படி, 190 நாடுகளில் இந்தியா 63ஆவது இடத்தில் உள்ளது. இவ்வறிக்கையின்படி, உலக வங்கி, தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக, இந்தியாவை முன்னேற்றமடைந்த நாடுகள் இடம்பெற்றுள்ள முதல் பத்து இடங்களில் ஒன்றாக அங்கீகரித்துள்ளது.

✓ திவால் நிலையைக் கையாள்வதன்கீழ், இந்தியாவின் மீட்புத் திறன் விகிதம் 26.5 சதவீதத்தில் இருந்து 71.6% ஆக முன்னேறியுள்ளது. திவால் நிலையிலிருந்து இந்தியா மீள்வதற்கான கால அவகாசம், 4.3 ஆண்டுகளில் இருந்து 1.6 ஆண்டுகளாகக் குறைந்துள்ளது. கட்டுமான அனுமதி வழங்குவதற்கான நடைமுறைகளின் எண்ணிக்கையை இந்தியா குறைத்துள்ளது. இதுதவிர, தெற்காசிய நாடுகளில் இந்தியா முதலிடத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டுள்ளது.

**3.வுஷு உலக சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்ற முதல் இந்தியர் யார்?**

A) இராஜ்வீர் சிங்

B) சந்தோஷ் குமார்

C) இரவீந்தர் கிரேவால்

**D) பிரவீன் குமார் ☑**



✓ 15ஆவது வுஷு உலக சாம்பியன்ஷிப்பின் 48 கிலோ பிரிவில் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை பிரவீன் குமார் பெற்றுள்ளார். இறுதிப்போட்டியில், ஷாங்காயில் நடந்த ஆடவர் சாண்டா போட்டியில், பிலிப்பைன்ஸின் ரஸ்ஸல் டயஸை அவர் வீழ்த்தினார். 'வுஷு' என்பது ஒரு சீன தற்காப்புக் கலையாகும். இது மரபார்ந்த சீனக் கலைகளை அடிப்படையாகக் கொண்ட ஒருவரோடொருவர் மோதும் உடல்திறன் விளையாட்டாகும்.

**4.மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்தின் (Staff Selection Commission – SSC) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**A) பிரஜ் ராஜ் சர்மா ☑**

B) பங்கஜ் குமார்

C) பூஜா கதியன்

D) சந்தியாராணி தேவி



✓ மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்தின் புதிய தலைவராக பிரஜ் ராஜ் சர்மா IAS (1984: ஜம்மு & காஷ்மீர்) நியமிக்கப்பட்டுள்ளார். சமீபத்தில், இந்திய தனித்துவ அடையாள அட்டை ஆணையத்தின் (UIDAI) புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக பங்கஜ் குமார் நியமிக்கப்பட்டதை அடுத்து, பிரஜ் ராஜ் சர்மா இப்பதவிக்கு வந்துள்ளார்.

**5. "Ten Studies in Kashmir: History and Politics" என்னும் நூலின் ஆசிரியர் யார்?**

A) ஞான சந்திர கோஷ்

B) இராஜேஸ்வர் ஆச்சார்யா

**C) காசி நாத் பண்டிட் ☑**

D) கீதா மேத்தா



✓ "Ten Studies in Kashmir: History and Politics" என்னும் நூலை கல்வியாளரும் 'பத்மஸ்ரீ' விருது பெற்றவருமான பேராசிரியர் காசி நாத் பண்டிட் எழுதியுள்ளார். இந்நூல், 1947 முதல் ஜம்மு & காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு நிலையை நீக்கம் செய்யும் வரை (1947–2019 நிகழ்வுகள்) நிகழ்ந்த நிகழ்வுகளை வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது. சமகால காஷ்மீர் வரலாற்றின் பல்வேறு அம்சங்களில் உள்ள சிக்கல்களையும் ஆசிரியர் இதில் விவரித்துள்ளார்.

- ✓ காஷ்மீர் நெருக்கடிகளின் தோற்றம், அதன் தோற்றுவாய்கள் மற்றும் கிளர்ச்சிகள், மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமித்த காஷ்மீர் மற்றும் ஐ.நாவில் காஷ்மீர் விவாதம் போன்ற விஷயங்களையும் அவர் இதில் விவரித்துள்ளார்.

**6. 2020 QS இந்திய பல்கலைக்கழகத் தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ள நிறுவனம் எது?**

A) ஐஐடி கரக்பூர்

**B) ஐஐடி பம்பாய் ☑**

C) ஐஐடி தில்லி

D) ஐஐடி இந்தூர்

- ✓ Quacquarelli Symonds (QS) இந்திய பல்கலைக்கழகத் தரவரிசை – 2020இல், IIT பம்பாய் கல்வி நிறுவனம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. QS இந்திய தரவரிசை என்பது கல்விசார் மதிப்பீடுகள் (30%), நிறுவனரின் மதிப்பீடுகள் (20%), பேராசிரியர்களின் ஆராய்ச்சிகள் (10%), ஆராய்ச்சிக்கட்டுரைகளின் மேற்கோள் எண்ணிக்கை (10%), மாணவ–ஆசிரியர் விகிதம் (20%), பன்னாட்டு மாணவர்கள் (2.5%) மற்றும் பன்னாட்டு ஆசிரியர்கள் எண்ணிக்கை (2.5%), வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்களின் மதிப்பீடுகள் (5%) ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப்படுவதாகும்.
- ✓ பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனம் (IISc) இரண்டாவது இடத்தையும், அதைத் தொடர்ந்த இடங்களில் தில்லி, மெட்ராஸ், கரக்பூர், கான்பூர், ரூர்க்கி மற்றும் கௌகாத்தி ஆகிய IITகள் உள்ளன.

**7. உலக தகவல் மேம்பாட்டு நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?**

A) அக்டோபர் 25

B) அக்டோபர் 27

C) அக்டோபர் 26

**D) அக்டோபர் 24 ☑**



- ✓ வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் சிக்கல்களை நோக்கி உலகின் கவனத்தை ஈர்க்கவும் அவற்றுக்கு தீர்வுகாண்பதற்கு சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துவதின் அவசியத்தையும் உணர்ந்துகொள்வத –ற்காகவும் ஒவ்வோர் ஆண்டும் அக்.24 அன்று உலக தகவல் மேம்பாட்டு நாள் (World Development Information Day) கடைப்பிடிக்கப்படுகிறது. 1972ஆம் ஆண்டு, ஐ.நா பொது அவையால் உருவாக்கப்பட்ட இந்தச் சிறப்புநாள், ஐ.நா நாளுடன் இணைந்து கொண்டாடப்படுகிறது.

**8. உலக போலியோ நாள் (World Polio Day) கடைப்பிடிக்கப்படும் தேதி எது?**

A) அக்டோபர் 25

B) அக்டோபர் 27

C) அக்டோபர் 26

**D) அக்டோபர் 24 ☑**



✓ இளம்பிள்ளைவாதம் என்னும் போலியோ நோய்க்கு எதிரான தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்த ஜோனஸ் சால்க் அவர்களின் நினைவைப் போற்றும் விதமாக ரோட்டரி இண்டர்நேஷனல் உலக போலியோ நாளை ஏற்படுத்தியது. செயலிழப்பு செய்யப்பட்ட போலியோ வைரஸ் தடுப்புமருந்து மற்றும் உயிருள்ள வாய்வழிப் போலியோ வைரஸ் தடுப்புமருந்து ஆகியவற்றின் பயன்பாட்டால், 1988ஆம் ஆண்டில் 'உலக போலியோ ஒழிப்புத் திட்டம்' உருவாக்கப்பட்டது.

**9. 2019 மெல்பர்ன் மெர்சர் சர்வதேச ஓய்வூதிய குறியீட்டில் இந்தியாவின் தரநிலை என்ன?**

A) 43

B) 55

C) 17

**D) 32 ☑**

✓ 2019 மெல்பர்ன் மெர்சர் சர்வதேச ஓய்வூதிய குறியீட்டில், 39 நாடுகளில் இந்தியா 32ஆவது இடத்தில் உள்ளது. இந்தக் குறியீடு, வெவ்வேறு வருமானக் குழுக்களில் உள்ள குடிமக்களுக்கு, ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய சலுகைகளை நாடுகள் எவ்வளவு நியாயமாக வழங்குகின்றன என்பதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

✓ போதுமான அளவு (adequacy), நிலைத்தன்மை (sustainability) மற்றும் ஒருமைப்பாடு (integrity) ஆகிய மூன்று துணை–குறியீடுகளின் முன்னேற்றத்தின் காரணமாக இந்தியாவின் குறியீட்டு மதிப்பு பெரும்பாலும் அதிகரித்துள்ளது. இந்தக் குறியீட்டின்படி, நிகர வீட்டு சேமிப்பு, ஓய்வூதியம் மற்றும் பகுதிநேர வேலைகளை நிர்வகிப்பதில் அதிக நெகிழ்வுத்தன்மை, நிர்வாகத்தில் நிலையான முன்னேற்றம் மற்றும் தனியார் ஓய்வூதிய திட்டங்களைச் சுற்றி அறிக்கைசெய்தல் உள்ளிட்ட பல்வேறு பரிமாணங்களில், மதிப்பெண்களில் சிறிதளவு முன்னேற்றம் கண்டதன் காரணமாக இந்தியாவுக்கு இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

10. 2021ஆம் ஆண்டில் கிளப்களுக்கான விரிவாக்கப்பட்ட 24 அணிகள் கொண்ட FIFA உலகக் கோப்பையின் முதல் பதிப்பை நடத்தவுள்ள நாடு எது?




A) கத்தார்

B) இந்தியா

**C) சீனா ☑**

D) இலங்கை

✓ 2021இல் கிளப்களுக்கான விரிவாக்கப்பட்ட 24 அணிகள் கொண்ட FIFA உலகக்கோப்பையின் தொடக்க பதிப்பை சீனா நடத்துகிறது. தற்போதைய கிளப் உலகக்கோப்பையில், UEFA சாம்பியன்ஸ் லீக் வைத்திருப்பவர்கள் உட்பட 7 அணிகள் உள்ளன. 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் இந்தப் போட்டியை கத்தார் நடத்துகிறது.

## நடப்பு நிகழ்வுகள்

**1.நடப்பாண்டுக்கான (2019) ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரத்தின் கருப்பொருள் என்ன?**

A) Promote Integrity and Eradicate Corruption

B) My Vision – Corruption Free India

C) Eradicate Corruption – Build a New India

**D) Integrity – A Way of Life ☑**

✓ அக்டோபர் கடைசி வாரம் முழுவதும் மத்திய விழிப்புணர்வு ஆணையத்தின் உதவியுடன் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் அனுசரிக்கப்படுகிறது. "Integrity – A Way of Life" என்னும் கருப்பொருளுடன் நடப்பாண்டின் (2019) ஊழலுக்கு எதிரான விழிப்புணர்வு வாரம் அக்டோபர்.28 முதல் நவம்பர்.2 வரை கடைப்பிடிக்கப்படவுள்ளது. வெளிப்படைத்தன்மை, ஒருமைப்பாடு மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்–துவதற்காக மத்திய விழிப்புணர்வு ஆணையத்தால் ஆண்டுதோறும் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. ஊழல் தொடர்பான நடைமுறைகளைப்பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும்.

**2.ஒடிசாவில் உள்ள சிறுதொழில் விவசாயிகளுக்கு ஆதரவளிக்கும் ஒப்பந்த திட்டத்தில் கையெழுத்திட்டுள்ள சர்வதேச அமைப்பு எது?**

A) ஆசிய வளர்ச்சி வங்கி

B) சர்வதேச நாணய நிதியம்

**C) உலக வங்கி ☑**

D) ஆசிய உட்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வங்கி

✓ ஒடிசாவின் 15 மாவட்டங்களைச் சேர்ந்த 1,25,000 சிறுதொழில் விவசாயிகளுக்கு ஆதரவாக இந்திய அரசு, ஒடிசா மாநில அரசு மற்றும் உலக வங்கி சமீபத்தில் $165 மில்லியன் அமெரிக்க டாலர் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

✓ நெகிழ்திறன்மிக்க விதை வகைகள் மற்றும் உற்பத்தி தொழில்நுட்பங்களுக்கான அணுகலை மேம்படுத்துதல், அதிக காலநிலை–நெகிழ்திறனுடன் கூடிய பயிர்களை நோக்கிய பரவலாக்கல் மற்றும் சிறந்த நீர் மேலாண்மை மற்றும் நீர்ப்பாசன சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துவதன் மூலம் பாதகமான காலநிலைக்கு எதிராக சிறுதொழில் விவசாயிகளின் நெகிழ்வை இத்திட்டம் வலுப்படுத்தும்.

**3.58ஆவது இந்தோ–திபெத்திய எல்லைக் காவல்படை எழுச்சி நாள் கொண்டாடப்படும் தேதி எது?**

A) அக்டோபர் 25 B) அக்டோபர் 27

C) அக்டோபர் 26 **D) அக்டோபர் 24 ☑**

✓ 58ஆவது இந்தோ–திபெத்திய எல்லைக் காவல்படையின் எழுச்சிநாளானது கடந்த அக்.24 அன்று கொண்டாடப்பட்டது. இது இலடாக் பகுதியிலுள்ள கரகோறம் கணவாய் முதல் அருணாசல பிரதேசம் ஜசிப்லா வரையுள்ள 3488 கி.மீ., இந்திய–சீன எல்லையைப் பாதுகாக்கிறது. பனிப்புயல், பனிப்பாறை சரிவுகள், நிலச்சரிவுகள் போன்ற இயற்கை சீற்றங்களுடன் –40℃ வெப்பநிலையிலும் 9000–18000 அடி உயரத்திலும் எல்லையைக் காக்கிறார்கள்.

✓ இந்திய–திபெத் எல்லைக் காவல்படையானது 1962 அக்.24 அன்று மத்திய சேமக்காவல் படைச்சட்டம் மூலம் உருவாக்கப்பட்டது. பின்னர் இந்திய–திபெத் எல்லைக் காவல்படைச் சட்டம் உருவாக்கப்பட்டு 1994 முதல் மறுவரையறை செய்யப்பட்டது.

**4.முதலாவது சர்வதேச பயோ இந்தியா–2019 உச்சிமாநாடு நடைபெறவுள்ள நகரம் எது?**




A) சென்னை

B) காந்தி நகர்

C) அகர்த்தலா

**D) புது தில்லி ☑**

✓ முதலாவது சர்வதேச பயோ இந்தியா–2019 உச்சிமாநாடானது நவ.21 முதல் 23 வரை புது தில்லியில் நடைபெறுகிறது. இம்மாநாடு உள்நாட்டு ஆராய்ச்சி திறன்கள், உயிரி–தொழில்முனைவு, முதலீடுகள் மற்றும் கிராமப்புற இந்தியா மற்றும் இரண்டாம் கட்ட, மூன்றாம் கட்ட நகரங்களுக்கு தொழில்நுட்ப வசதியைக் கொண்டுசெல்லுதல் ஆகியவற்றை வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, மிகப் பெரிய உயிரி தொழில்நுட்ப நிறுவனங்களின் உச்சிமாநாடுகளுள் ஒன்றாகும்.

**5. ABADHA திட்டம் தொடர்புடைய மாநிலம் எது?**



A) ஜார்கண்ட்

B) பீகார்

**C) ஒடிசா ☑**

D) மேற்கு வங்கம்

✓ மூன்றே ஆண்டுகளில், 'பூரி' நகரத்தை உலகத்தரம் வாய்ந்த பாரம்பரிய நகரமாக மாற்றுவதற்காக ஒடிசா மாநில அரசு, அடிப்படை வசதிகள் மற்றும் பாரம்பரிய & கட்டிடக்கலை மேம்பாடு (Augmentation of Basic Amenities and Development of Heritage and Architecture – ABADHA) திட்டத்தின் கீழ், ₹3208 கோடியை செலவிட முடிவுசெய்துள்ளது.

**6. தந்தேராஸின்போது முக்கியமந்திரி கன்யா சுமங்கல யோஜனாவை தொடங்கிய மாநில அரசு எது?**



**A) உத்தரபிரதேசம் ☑**

B) இராஜஸ்தான்

C) மத்தியபிரதேசம்

D) பஞ்சாப்

✓ தந்தேராஸின்போது, பெண் குழந்தைகட்கு அதிகாரமளிக்கும் விதமாக உத்தரபிரதேச மாநில அரசானது முக்கியமந்திரி கன்யா சுமங்கல யோஜனாவை அறிமுகம் செய்தது. இத்திட்டத்தின்படி, பெண் குழந்தை பிறக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ₹15,000 வழங்கப்படும். தடுப்பூசி போடும்போது, 1, 5 மற்றும் 9ஆம் வகுப்புகளில் சேர்க்கும்போது, பட்டப்படிப்பில் சேரும்போது போன்ற பல்வேறு கட்டங்களை ஒரு பெண் குழந்தை நிறைவு செய்யும்போது, சிறுமிகளின் பதிவுசெய்யப்பட்ட வங்கிக்கணக்கில் மாநில அரசானது ஒரே தவணையில் நிதியை நேரடியாக செலுத்தும்.

## 7. அண்மையில் காலமான K R வாத்வானே, எந்தத் துறையுடன் தொடர்புடையவர்?

**A)** விளையாட்டு ☑

B) சட்டம்

C) ஓவியம்

D) இசை



✓ மூத்த விளையாட்டுத்துறை பத்திரிகையாளரும் எழுத்தாளருமான K R வாத்வானே (90), தில்லியில் காலமானார். கராச்சியில் பிறந்த இவர் (தற்போது பாகிஸ்தானில் உள்ளது), 1947இல் பிரிவினைக்குப் பிறகு இலக்னோவுக்கு குடிபெயர்ந்தார். 1960களில் புது தில்லிக்குச் செல்வதற்கு முன்பு இலக்னோவில் அவர் தனது வாழ்க்கையைத் தொடங்கினார். அவர் கிட்டத்தட்ட 50 ஆண்டுகளாக விளையாட்டுத் துறை இதழாளராக பணியாற்றியுள்ளார். முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிய பின்னர், அவர், இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தித்தாளின் விளையாட்டுத் துறை ஆசிரியரானார். அவர் ஓய்வுபெற்ற பிறகு பல இந்திய செய்தித்தாள்களில் சார்பற்ற எழுத்தாளராக பணியாற்றினார்.

## 8. தொட்டலகொண்டா புத்த மடாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?

**A)** ஆந்திரப் பிரதேசம் ☑

B) கர்நாடகம்

C) கேரளம்

D) மகாராஷ்டிரா



✓ ஆந்திரத்தின் விசாகப்பட்டினத்தில் பெய்த கனமழையால் தொட்டலகொண்டாவில் அமைந்துள்ள 2000 ஆண்டுகள் பழமையான பாரம்பரியமிக்க புகழ்பெற்ற மகாதூபியின் முக்கியப்பகுதியானது சமீபத்தில் சேதமடைந்தது. மகாதூபியின் குவிமாடம், பௌத்த மதத்தின் ஹீனயானா பிரிவுக்குச் சொந்தமானது.

✓ இந்தத் தலம், தொட்டலகொண்டாவின் தூபிகள், சைத்தியங்கள் மற்றும் விகாரங்களின் எச்சங்களைக் கொண்ட ஒரு முக்கிய சுற்றுலாத்தலமாகும். இலங்கை, இந்தோனேசியா, கம்போடியா போன்ற பிற நாடுகளில் பௌத்த மதத்தை பரப்புவதற்கான கருமையமாக இது திகழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

**9.ஐரோப்பிய ஒன்றியத்தின் நடப்பாண்டு (2019) சாகரோவ் மனித உரிமை பரிசை வென்றவர் யார்?**

A) ஒலெக் சென்ட்சோவ்

**B) இல்காம் தோத்தி (Ilham Tohti) ☑**

C) லியு சியாவோ

D) நஸ்ரின் சோதவ்டே



- ✓ சீனாவில் பிரிவினைவாதத்தை தூண்டியதற்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள கல்வியாளர் இல்காம் தோத்திக்கு, சின்சியாங்கில் இனப்பதட்டங்கள் குறித்து கவன ஈர்ப்பு கொண்டுவந்ததற்காக ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் 'சாகரோவ்' என்னும் சிறந்த மனித உரிமை பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- ✓ உய்குர் சிறுபான்மையினரைச் சேர்ந்தவரான தோத்தி, உய்குர் இன மக்களை சீன அரசு நடத்தும் விதத்தை கடுமையாக விமர்சிப்பவராவார். பிரிவினைவாத குற்றச்சாட்டில் 2014இல் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இந்நடவடிக்கை, இஸ்லாம் இன சிறுபான்மையினரை சீன அரசு நடத்தும் விதத்தை வெளிப்படையாகக் கண்டிக்கும். மேலும், பெய்ஜிங்கிலிருந்து பதிலடி நடவடிக்கையையும் இது பெற்றுத்தரும்.

**10.பொருளாதார ஆய்வுகள் நிறுவனத்தின் 'உத்யோக் இரத்தன் விருது – 2019'ஐ வென்றவர் யார்?**

A) கிஷன் குமார்

B) பிரதீப் ஜைன்

**C) தாக்கூர் அனுப் சிங் ☑**

D) குல்தீப் யாதவ்



- ✓ Marg ERPஇன் தலைவரும் மேலாண்மை இயக்குநருமான தாக்கூர் அனுப் சிங், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் எவ்வாறு தங்கள் வணிகத்தை மேம்படுத்த முடியும் என்பது குறித்த அவரது உன்னத பணிக்காக மதிப்புமிக்க 'உத்யோக் இரத்தன் விருது–2019'ஐ வென்றுள்ளார்.
- ✓ நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சிறப்பான பங்களிப்பைச் செய்யும் இந்திய குடிமக்களைக் கௌரவிக்கும் விதமாக ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப்படுகிறது. இதனை இந்திய அரசுடன் இணைந்து பொருளாதார ஆய்வுகள் நிறுவனம் (IES) வழங்கி வருகிறது.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ 2020ஆம் ஆண்டுக்கான QS இந்திய தரவரிசைப்பட்டியலில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் 24ஆவது இடத்தையும், தமிழ்நாட்டில் உள்ள கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களில் முதலாவது இடத்தையும் பெற்றுள்ளது. தமிழக அளவில் சென்னை IIT, அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவற்றை அடுத்து அழகப்பா பல்கலைக்கழகம் மூன்றாமிடம் பெற்றுள்ளது.
- ✓ ஒப்பந்த அடிப்படையில் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளின் நலன்களைக் காப்பதற்கு புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. அகில இந்திய அளவில் ஒப்பந்த சாகுபடி முறைக்கென்று, முதன்முறையாக தனியொரு சட்டத்தை வடிவமைத்துள்ள மாநிலம் தமிழ்நாடு ஆகும்.
- ✓ சென்னையிலிருந்து ஜப்பான் தலைநகரம் டோக்கியோவுக்கு நேரடி வான் போக்குவரத்து சேவை தொடங்கப்பட்டுள்ளது. கடந்த ஜனவரியில் சென்னையில் நடந்த உலக முதலீட்டாளர் மாநாட்டின்போது, நேரடி வான் போக்குவரத்து சேவையை இயக்குவதற்கு ஜப்பான் தூதர் கொஜிரோ உச்சியாமா அறிவிப்பு வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.
- ✓ மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்தநாளையொட்டி தூத்துக்குடி வ.உ.சிதம்பரம் கல்லூரியில், மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை சார்பில் புகைப்படம் மற்றும் டிஜிட்டல் கண்காட்சி நடைபெற்றது.
- ✓ இந்திய அணுசக்தி துறையின் கல்பாக்கம் வளாகத்தில், சென்னை அணு மின் நிலையம் (MAPS), இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையம் (IGCAR), கல்பாக்கம் அணு மறுசுழற்சி முன்மாதிரி அதிவேக ஈனுலை (PFBR) (அணு மின் திட்டம்) மற்றும் பாபா அணு ஆராய்ச்சி மைய (BARCF) பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இந்த வளாகத்தில் அவசரகால தயார் நிலை திட்டத்தின்படி, ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்படும் வளாக அவசர நிலை ஒத்திகை, கடந்த 21.10.2019 அன்று நடத்தப்பட்டது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.இந்திய வானூர்தி நிலைய ஆணையத்தின் தலைவராக அண்மையில் (அக்டோபர் 2019) நியமிக்கப்பட்டவர் யார்?**

**A)** அரவிந்த் சிங் ☑

B) சுக்பீர் சிங் சந்து

C) சஞ்சீவ் சரண்

D) பூபேந்திர சிங்



✓ இந்திய வானூர்தி நிலைய ஆணையத்தின் (AAI) தலைவராக மூத்த IAS அதிகாரி அரவிந்த் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் பணியாளர் நலன், பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதிய அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. AAIஇன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அவர், மத்திய அரசில் பணிபுரியும் கூடுதல் செயலாளரின் பதவி மற்றும் ஊதியத்தரத்தில் பணியாற்றுவார். மற்றொரு நியமனமாக, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் (NHAI) தலைவராக சுக்பீர் சிங் சந்து IAS நியமிக்கப்பட்டுள்ளார்.

**2. பாராலிம்பிக் சாம்பியனான மரியகே வெர்வூட், அண்மையில் தனது நாற்பதாவது வயதில், தசை சீரழிவுநோய் காரணமாக தனக்கேற்பட்ட துன்பங்களுக்கு முடிவுகட்டுவதற்காக கருணைக் கொலை மூலம் தனது வாழ்க்கையை முடித்துக்கொண்டார். அவர் எந்த நாட்டைச் சார்ந்தவர்?**

A) ஸ்பெயின்

**B)** பெல்ஜியம் ☑

C) பிரான்ஸ்

D) இத்தாலி



✓ பெல்ஜிய பாராலிம்பிக் சாம்பியனான மரியகே வெர்வூட் (40), அக்.22 அன்று கருணைக்கொலை மூலம் தனது வாழ்க்கையை முடித்துக்கொண்டார். பெல்ஜியத்தில் கருணைக்கொலை சட்டபூர்வமானதாகும். 2016ஆம் ஆண்டு ரியோ விளையாட்டுகளுக்குப் பிறகு அவர் தனது கருணைக்கொலை (euthanasia) குறித்த விருப்பத்தை தெரிவித்தார்.

✓ கடந்த 2012இல் இலண்டனில் நடந்த மாற்றுத்திறனாளிகளுக்கான பாராலிம்பிக் போட்டியில் சக்கர நாற்காலி 100 மீட்டர் பிரிவில் தங்கம் வென்றார். 200 மீட்டர் ஓட்டத்தில் வெள்ளி கைப்பற்றினார். 2016ஆம் ஆண்டில் நடந்த ரியோ பாராலிம்பிக்கில், 400 மீட்டர் பிரிவில் வெள்ளியும் 100 மீட்டர் பிரிவில் வெண்கலமும் கைப்பற்றினார். இதன்பின், பார்வை குறைபாடு ஏற்பட, அதுவே கடைசிப்போட்டி என அறிவித்தார்.

**3.நோபல் பரிசு பெற்ற அபிஜித் பானர்ஜிக்கு அண்மையில், வாழ்நாள் உறுப்பினர் தகுதியை வழங்கிய தொழில்முறை கால்பந்து சங்கம் எது?**



A) பெங்களூரு FC

**B) மோகுன் பகன் ☑**

C) யுனைடெட் சிக்கிம்

D) இந்திய ஏரோஸ்

✓ நோபல் பரிசு பெற்ற அபிஜித் பானர்ஜிக்கு மோகுன் பகன் தடகள சங்கமானது வாழ்நாள் உறுப்பினர் தகுதியை வழங்கி கௌரவித்துள்ளது. மோகுன் பகன் சங்கத்தின் உதவி பொதுச்செயலாளரான ஸ்ரீஞ்ஜோய் போஸ் மற்றும் அச்சங்கத்தின் பிற அதிகாரிகள் அனைவரும் பொருளாதார வல்லுநர் அபிஜித் பானர்ஜியின் வீட்டிற்கே சென்று இதனை வழங்கியுள்ளனர்.

✓ 1911ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் இராணுவத்தின் கிழக்கு யாக்ஷயர் ரெஜிமென்ட் அணியை இறுதிப் போட்டியில் வீழ்த்தி, இந்திய கால்பந்து கழகம் (IFA) கேடயத்தை வென்ற முதல் இந்திய கிளப்பாக மோகுன் பகன் கிளப் ஆனது.

**4.சமீபத்தில் காலமான திலீப் பாரிக், எந்த மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சராக இருந்தார்?**



A) மகாராஷ்டிரா

**B) குஜராத் ☑**

C) உத்தரபிரதேசம்

D) மத்தியபிரதேசம்

✓ குஜராத் மாநிலத்தில் முன்னாள் முதலமைச்சரான திலீப் பாரிக் (82), அக்.25 அன்று அகமதாபாத்தில் காலமானார். அக்டோபர் 1997 – மார்ச் 1998 வரை குஜராத் மாநிலத்தின் 13ஆவது முதலமைச்சராக அவர் பணியாற்றினார். தொழிலதிபரான அவர், குஜராத் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைப்பின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

**5. T P இராதாமணி, எந்த மொழி திரையுலகினைச் சார்ந்தவராவார்?**



A) தமிழ்

B) தெலுங்கு

C) கன்னடம்

**D) மலையாளம் ☑**

✓ மலையாள திரையுலகைச் சார்ந்த மூத்த நடிகை T P இராதாமணி (67), அக்.27 அன்று சென்னையில் காலமானார். தனது பதினான்காம் வயதில் திரையுலக பயணத்தை தொடங்கிய அவர், சுமார் நூறு படங்களுக்கு மேல் நடித்துள்ளார்.

✓ 'உத்தராயணம்' என்னும் திரைப்படத்தில் நடித்ததற்காக அவர் பிரபலமாக அறியப்படுகிறார். 1997இல் மோகன்லால் நடித்து வெளிவந்த, 'ஒரு யாத்ராமொழி' என்னும் படத்தில் அவர் கடைசியாக நடித்தார்.

**6.அண்மையில் காலமான K R வாத்வானே, எந்தத் துறையுடன் தொடர்புடையவர்?**

**A) விளையாட்டு ☑**

B) சட்டம்

C) ஓவியம்

D) இசை



✓ மூத்த விளையாட்டுத்துறை பத்திரிகையாளரும் எழுத்தாளருமான K R வாத்வானே (90), தில்லியில் காலமானார். கராச்சியில் பிறந்த இவர் (தற்போது பாகிஸ்தானில் உள்ளது), 1947இல் பிரிவினைக்குப் பிறகு இலக்னோவுக்கு குடிபெயர்ந்தார். 1960களில் புது தில்லிக்குச் செல்வதற்கு முன்பு இலக்னோவில் அவர் தனது வாழ்க்கையைத் தொடங்கினார்.

✓ கிட்டத்தட்ட 50 ஆண்டுகளாக அவர் விளையாட்டுத்துறை இதழாளராக பணிபுரிந்துள்ளார். முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிய பின்னர், அவர், இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தித்தாளின் விளையாட்டுத் துறை ஆசிரியரானார். ஓய்வுபெற்ற பிறகு, பல இந்திய செய்தித்தாள்களில் சார்பற்ற எழுத்தாளராகவும் அவர் பணியாற்றினார்.

**7. நடப்பாண்டு உலக சுகாதார பாதுகாப்பு குறியீட்டில் இந்தியாவின் தரநிலை என்ன?**

A) 54

**B) 58 ☑**

C) 67

D) 65




✓ உலக சுகாதார பாதுகாப்பு குறியீட்டில் (Global Health Security), 195 நாடுகளுள் இந்தியா 57ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்தப் பட்டியலில் ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) முதலிடத்திலும், ஐக்கிய பேரரசு (UK) மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் முறையே 2 மற்றும் 3ஆவது இடங்களிலும் உள்ளன.

✓ GHS குறியீடு என்பது உலகளவில் தொற்றுநோய் மற்றும் அதன் அச்சுறுத்தல்கள் குறித்த முதல் விரிவான மதிப்பீடாகும். இந்த அறிக்கை Nuclear Threat Initiative (NTI) மற்றும் பொருளாதார வல்லுநர் புலனாய்வு அலகின் (EIU) ஆராய்ச்சியுடன் இணைந்த சுகாதார பாதுகாப்புக்கான ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழக மையத்தின் திட்டமாகும். உலகில் 13 நாடுகள் மட்டுமே எந்தவொரு சுகாதார பேரிடர் வந்தாலும் அதனைக் கையாள தயாராக உள்ளதாக இந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

**8.மனித உரிமைகளுக்கான சாகரோவ் பரிசை வழங்கும் அமைப்பு எது?**

A) ஐநா மனித உரிமைகள் அமைப்பு

B) சர்வதேச மன்னிப்பு அவை

C) சர்வதேச அகதிகள் அமைப்பு

**D) ஐரோப்பிய ஒன்றியம் (நாடாளுமன்றம்) ☑**



- ✓ சீனாவில் பிரிவினைவாதத்தை தூண்டியதற்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள கல்வியாளர் இல்காம் தோத்திக்கு, சின்சியாங்கில் இனப்பதட்டங்கள் குறித்து கவன ஈர்ப்பு கொண்டுவந்ததற்காக ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் 'சாகரோவ்' என்னும் சிறந்த மனித உரிமை பரிசு வழங்கப்பட்டுள்ளது.

- ✓ உய்குர் சிறுபான்மையினரைச் சேர்ந்தவரான தோத்தி, உய்குர் இன மக்களை சீன அரசு நடத்தும் விதத்தை கடுமையாக விமர்சிப்பவராவார். பிரிவினைவாத குற்றச்சாட்டில் 2014இல் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இந்நடவடிக்கை, இஸ்லாம் இன சிறுபான்மையினரை சீன அரசு நடத்தும் விதத்தை வெளிப்படையாகக் கண்டிக்கும். மேலும், பெய்ஜிங்கிலிருந்து பதிலடி நடவடிக்கையையும் இது பெற்றுத்தரும்.

**9.நடப்பாண்டில் (2019) மதிப்புமிக்க விஸ்டன் இந்தியா அல்மானாக் கிரிக்கெட்டாளர் விருதை வென்ற இரண்டு இந்திய கிரிக்கெட் வீரர்கள் யார்?**

A) புவனேஷ்வர் குமார் & மிதாலி ராஜ்

B) ஹர்திக் பாண்டியா & ஜுலன் கோஸ்வாமி

C) ஹர்திக் பாண்டியா & ஸ்மிருதி மந்தனா

**D) ஜஸ்பிரீத் பும்ரா & ஸ்மிருதி மந்தனா ☑**



- ✓ நடப்பாண்டுக்கான மதிப்புமிக்க 'விஸ்டன் இந்தியா அல்மனாக் கிரிக்கெட்டாளர்' விருதை ஜஸ்பிரீத் பும்ரா & ஸ்மிருதி மந்தனா ஆகியோர் வென்றுள்ளனர். மிதாலி இராஜ் & தீப்தி சர்மா ஆகியோருக்குப் பிறகு 'ஆண்டின் சிறந்த கிரிக்கெட்டாளர்' எனப் பெயரிடப்பட்ட மூன்றாவது வீராங்கனை மந்தனா.

- ✓ பாகிஸ்தானிய வீரர் பக்கர் ஜமான், இலங்கையின் திமுத் கருணாரத்னா மற்றும் ஆப்கானிஸ்தான் இரஷீத் கான் ஆகியோர் ஆசியாவிலிருந்து இவ்விருதைப் பெற்ற பிற வெற்றியாளர்களாவர். குண்டப்பா விஸ்வநாத் மற்றும் லாலா அமர்நாத் ஆகியோர் 'விஸ்டன் இந்தியா ஹால் ஆப் ஃபேமில்' சேர்க்கப்பட்டுள்ளனர். பிரஷாந்த் கிடாம்பி எழுதிய, "Cricket Country: The Untold History of the First All India Team" என்னும் நூல் நடப்பாண்டின் 'விஸ்டன் இந்தியா நூல்' என அறிவிக்கப்பட்டுள்ளது.

**10.மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், 'உலகின் மிகப்பெரிய பள்ளி' என கின்னஸ் உலக சாதனை படைத்துள்ள பள்ளி அமைந்துள்ள நகரம் எது?**

**A)** மும்பை

B) ஹைதராபாத்

**C) இலக்னோ ☑**

D) டேராடூன்

- ✓ இலக்னோவில் அமைந்துள்ள சிட்டி மாண்டிசோரி பள்ளி (CMS) மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் 'உலகின் மிகப்பெரிய பள்ளி' என கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளது. இந்தப் பள்ளியின் 18 கிளைகளிலும், 2019–20ஆம் கல்வியாண்டில் 56,000 மாணாக்கர்கள் படிக்கின்றனர்.
- ✓ 2014ஆம் ஆண்டில் CMS சமூகம் ஐ.நா பொது தகவல் துறையுடன் இணைந்த தன்னார்வ தொண்டு நிறுவனமாக அங்கீகாரம் பெற்றது. 2002ஆம் ஆண்டில் அமைதி கல்விக்கான UNESCO பரிசு CM பள்ளிக்கு வழங்கப்பட்டது. ஆன்மீகத் தலைவர் தலாய் லாமாவிடமிருந்து 'மனிதநேயத்தின் நம்பிக்கை' என்னும் விருதும் இந்தப் பள்ளிக்கு கிடைத்துள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ இந்திய மருத்துவ கழகத்தின் தொழில்நுட்பக்குழு தமிழ்நாட்டில் ஆறு (இராமநாதபுரம், விருதுநகர், நீலகிரி, திருப்பூர், திண்டுக்கல், நாமக்கல் ஆகிய 6 மாவட்டங்களில்) புதிய மருத்துவக்கல்லூரிகளை அமைக்க இசைவு கொடுத்துள்ளது. தற்போது, தமிழ்நாட்டில், 24 அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ளது குறிப்பிடத்தக்கது.
- ✓ 2018ஆம் ஆண்டில், 'பத்மஸ்ரீ' விருதுபெற்ற கோயம்புத்தூரைச் சேர்ந்த 'யோகா பாட்டி' நானம்மாள் (99) அக்.26 அன்று காலமானார்.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.யுனிவர்சல் சோம்போ பொது காப்பீட்டு நிறுவனத்துடன் இணைந்து, அண்மையில், சுகாதார காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய இந்திய பொதுத்துறை வங்கி எது?**

A) கனரா வங்கி

**B) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ☑**

C) யூனியன் பாங்க் ஆப் இந்தியா

D) பாங்க் ஆப் இந்தியா

✓ இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தனது வாடிக்கையாளர்களுக்காக தனித்துவம்மிக்க மேம்படுத்தப்பட்ட ஹெல்த்கேர்+ காப்பீட்டுத் திட்டம் யுனிவர்சல் சோம்போ பொது காப்பீட்டு நிறுவனத்தின் மூலமாக அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின் குறைந்தபட்ச காப்பீட்டுத் தொகை ₹50,000 ஆகும். அதிகபட்சமாக ₹15 இலட்சம் வரை காப்பீடு வழங்கப்படும்.

✓ இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கிளைகளில் வாடிக்கையாளர்களுக்கு இந்தக் காப்பீட்டுத் திட்டம் கிடைக்கப்பெறும். இந்தக் காப்பீட்டுத் திட்டத்துக்கு 50 வயது வரை மருத்துவப் பரிசோதனை எதுவும் தேவையில்லை என இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தெரிவித்துள்ளது.

**2.அண்மையில், இரண்டாம் முறையாக ஹரியானா மாநிலத்தின் முதலமைச்சரான மனோகர் லால் கட்டார், ஹரியானா சட்டமன்றத்தின் எந்தத் தொகுதியிலிருந்து போட்டியிட்டார்?**

A) ஜிந்த்

**B) கர்னல் ☑**

C) ரோதக்

D) பிவானி



✓ அக்.27 அன்று மனோகர் லால் கட்டார் இரண்டாம் முறையாக ஹரியானா மாநிலத்தின் முதல்வராக பதவியேற்றுக்கொண்டார். காங்கிரசு அல்லாத அரசாங்கம் ஹரியானாவில் தொடர்ச்சியாக இரண்டாம் முறையாக அரசமைப்பது இதுவே முதல்முறை.

✓ துஷ்யந்த் சௌதாலாவின் ஜனநாயக் ஜனதா கட்சியுடன் (JJP) கூட்டணி வைத்து ஹரியானாவில் பாஜக அரசமைத்துள்ளது. ஹரியானா முதலமைச்சராக கட்டார் பதவியேற்றுக்கொண்ட அதேநேரத்தில், JJB தலைவர் துஷ்யந்த் சௌதாலா ஹரியானாவின் துணை முதல்வராக பதவியேற்றுக்கொண்டார். துஷ்யந்த் சௌதாலா, இந்தியாவின் முன்னாள் துணைப்பிரதமர் தேவி லாலின் பேரனாவார்.


**3.கடந்த 12 ஆண்டுகளில், அரபிக்கடலின் முதல் சூப்பர் சூறாவளிப் புயலாக மாறிய அண்மைய புயல் எது?**

A) பானி சூறாவளி

B) ஹிக்கா சூறாவளி

**C) கியார் சூறாவளி ☑**

D) வாயு சூறாவளி




- ✓ கியார் சூறாவளியானது ஒரு வெப்பமண்டல சூறாவளியாகும். இது வட அரபிக்கடலில், இந்தியாவுக்கு மேற்கே 150 மைல் வேகத்தில் வகை 4 புயலாக தீவிரமடைந்துள்ளது. இது, கடந்த 12 ஆண்டுகளில் அரபிக்கடலில் உருவான முதல் சூப்பர் சூறாவளிப் புயல் என இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) தெரிவித்துள்ளது. இதற்கு மியான்மர் பெயரிட்டுள்ளது.
- ✓ இது வட அரபிக்கடலில் பதிவுசெய்யப்பட்ட இரண்டாவது மிகத்தீவிரமான வெப்பமண்டல சூறாவளி ஆகும். அரபிக்கடலில் பதிவுசெய்யப்பட்ட ஒரே வலுவான புயல் 2007ஆம் ஆண்டில் உருவான வகை 5ஐச் சேர்ந்த கோனு சூறாவளியாகும்.

**4.மும்பையில், உள்ளூர் இரயில்களுக்கான பயணச்சீட்டுகளை விரைவாக வழங்குவதற்காக இந்திய இரயில்வே அண்மையில் 42 தானியங்கி பயணச்சீட்டுகள் வழங்கும் இயந்திரங்களை அறிமுகப்படுத்தியது. இந்த இயந்திரங்கள் எந்த இயங்குதளத்தில் (OS) வேலை செய்கின்றன?**

A) விண்டோஸ்

**B) லினக்ஸ் ☑**

C) டெபியன்

D) ஹெலியோஸ்




- ✓ அக்.24 அன்று மும்பையில் உள்ள 42 புறநகர் நிலையங்களில், இந்திய ரயில்வே, "ஒன் டச் ATVM"ஐ அறிமுகப்படுத்தியது. இந்தச் சேவையின் நோக்கமானது, குறிப்பாக மும்பை புறநகர வலையமைப்பில், மில்லியன் கணக்கான பயணிகளுக்கு விரைவாக பயணச்சீட்டுகளை வழங்குவதாகும். ATVM – Automatic Ticket Vending Machine என்பது தானியங்கி பயணச்சீட்டு வழங்கும் எந்திரங்களாகும். இவை லினக்ஸ் இயங்குதளத்தில் வேலை செய்கின்றன.

**5.விஸ்வ சாந்தி தூபியின் (உலக அமைதி பகோடா) 50ஆவது ஆண்டு விழாவிற்காக அண்மைச் செய்திகளில் இடம்பிடித்த பீகாரைச் சேர்ந்த பௌத்த தளம் எது?**

A) கயா

**B) இராஜ்கிர் ☑**

C) நாளந்தா

D) போத்கயா



- ✓ பீகாரின் இராஜ்கிரில் அமைந்துள்ள விஸ்வ சாந்தி தூபியின் (உலக அமைதி பகோடா) பொன்விழா (50ஆம்) கொண்டாட்டங்களை இந்திய குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் தொடங்கிவைத்தார். இந்த விழாவில் பங்கேற்பதற்காக ஜப்பான், தாய்லாந்து, இலங்கை, பூட்டான், நேபாளம், அமெரிக்கா மற்றும் பிற நாடுகளைச்சேர்ந்த 300க்கும் மேற்பட்ட புத்த பிக்குகள், சீடர்கள் மற்றும் பிரபலங்கள் அங்கு வருகை தந்துள்ளனர்.

- ✓ இரத்னகிரி மலையடிவாரத்தில் அமைந்துள்ள இந்தப் பாரம்பரிமிக்க கட்டடமைப்பை, 1969ஆம் ஆண்டில், ஜப்பானிய பௌத்த மதத் துறவி புஜி குருஜி நிறுவினார்.


**6. 'சக்தி–2019' என்பது இந்தியா மற்றும் எந்த நாட்டின் படைகளுக்கு இடையேயான கூட்டு பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சியாகும்?**

A) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA)

B) ஐக்கிய பேரரசு (UK)

**C) பிரான்ஸ் ☑**

D) இஸ்ரேல்



- ✓ 'சக்தி–2019' என்பது இந்தியா மற்றும் பிரான்சில் என ஈராண்டுக்கொரு முறை மாறி மாறி நடத்தப்படும் ஒரு பயிற்சியாகும். நடப்பாண்டில், அக்.31 முதல் நவ.13 வரை இந்தியாவில் இராஜஸ்தான் மாநிலத்தில் இது நடத்தப்படவுள்ளது. பாலைவனம் போன்ற நிலப்பரப்பின் பின்னணியில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை பயிற்சியளிப்பதில் இது கவனம் செலுத்தும். இரு படைகளுக்கிடையேயான புரிதல், ஒத்துழைப்பு மற்றும் இயங்குதன்மையை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**7. 'ருத்ரஷீலா' என அழைக்கப்படும் ஒரு நீர்வழி பயணத்திற்காக கலிதர் படைப்பிரிவு அண்மைச் செய்திகளில் இடம்பெற்றது. 'கலிதர் போர்' எந்தப் போரின் ஒருபகுதியாகும்?**

A) இந்தியா – பாகிஸ்தான் போர், 1948

**B) இந்தியா – பாகிஸ்தான் போர், 1965 ☑**

C) இந்தியா – சீனா போர், 1962

D) இந்தியா – பாகிஸ்தான், 1971




- ✓ அக்.25 அன்று ஜோத்பூர் இராணுவ நிலையத்திலிருந்து, 'ருத்ரஷீலா' என அழைக்கப்படும் ஒரு நீர்வழி பயணத்தை Lt.Gen V S ஸ்ரீனிவாஸ் கொடியசைத்து தொடங்கிவைத்தார். இது, கலிதர் படைப்பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. படைவீரர்களை மன உறுதியுடன் இருப்பதற்கு தயார்ப்படுத்துவதே இந்தப் பயணத்தின் நோக்கமாகும்.

- ✓ 'தூய்மை இந்தியா' இயக்கம் மற்றும் 'ஆற்றின் சூழலமைப்பை பாதுகாத்தல்' உள்ளிட்ட சமூகம் சார்ந்த பிரச்சனைகள் குறித்தும் இக்குழு விழிப்புணர்வு ஏற்படுத்தும். இந்தப் பயணத்திற்கு மேஜர் இரவிகாந்த் கௌரவ் தலைமைதாங்குகிறார். இரண்டு அதிகாரிகள், 4 ஜூனியர் அதிகாரிகள் மற்றும் 18 வீரர்களும்

மொத்தம் 140 கி.மீ தூர இப்பயணத்தை ருத்ரபிரயாகிலிருந்து தொடங்கி ரிஷிகேஷ் வரை சென்று நிறைவு செய்வர்.

**8. உலக கேட்பொலிக்காட்சி பாரம்பரிய நாள் (World Day for Audiovisual Heritage) கொண்டாடப்படும் தேதி எது?**

A) அக்டோபர் 25

B) அக்டோபர் 26

C) அக்டோபர் 24

**D) அக்டோபர் 27 ☑**

✓ ஒலி ஆவணங்களை பாதுகாப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.27 அன்று உலக கேட்பொலிக் காட்சி பாரம்பரிய நாள் கொண்டாடப்படுகிறது. தேசிய திரைப்பட ஆவணக்காப்பகம், ஒலி சங்கங்கள், தொலைக்காட்சி, வானொலி நிலையங்கள் மற்றும் அரசுகளுக்கிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்காக இந்தச் சிறப்புநாள் முதன்முதலாக 2007ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது. UNESCO அமைப்பு இந்நாளை 2005ஆம் ஆண்டில் அங்கீகரித்தது.

✓ "Engage the Past Through Sound and Images" என்பது நடப்பாண்டில் (2019) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

**9. நடப்பாண்டுக்கான (2019) ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரத்தின் கருப்பொருள் என்ன?**

A) Promote Integrity and Eradicate Corruption

B) My Vision – Corruption Free India

C) Eradicate Corruption – Build a New India

**D) Integrity – A Way of Life ☑**

✓ அக்டோபர் கடைசி வாரம் முழுவதும் மத்திய விழிப்புணர்வு ஆணையத்தின் உதவியுடன் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் அனுசரிக்கப்படுகிறது.

✓ "Integrity – A Way of Life" என்னும் கருப்பொருளுடன் நடப்பாண்டின் (2019) ஊழலுக்கு எதிரான விழிப்புணர்வு வாரம் அக்.28 முதல் நவம்பர்.2 வரை கடைப்பிடிக்கப்படவுள்ளது. வெளிப்படைத்தன்மை, ஒருமைப்பாடு & பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்காக மத்திய விழிப்புணர்வு ஆணையத்தால் ஆண்டுதோறும் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. ஊழல் தொடர்பான நடைமுறைகளைப்பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும்.

**10.குழந்தைகள் மீதான பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பேசவும், UNICEF மற்றும் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்துடன் கைகோர்த்துள்ள நடிகர் யார்?**

**A) ஆயுஷ்மான் குரானா ☑**

B) ரித்திக் ரோஷன்

C) இராஜ்குமார் ராவ்

D) விக்கி கௌஷல்



- ✓ ஹிந்தி நடிகர் ஆயுஷ்மான் குரானா, குழந்தைகள் மீதான பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் குரலெழுப்புவதற்குமாக UNICEF மற்றும் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்துடன் கைகோர்த்துள்ளார்.
- ✓ குழந்தைகள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் POCSO சட்டம் வழங்கும் பாதுகாப்பு மற்றும் சட்ட ஆதரவு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஆயுஷ்மான் குரானா அமைச்சகத்துடன் இணைந்துள்ளார். இதற்கென ஒரு பிரத்தியேகமான காணொளியில் அவர் நடித்துள்ளார். அது சமூக வலைத்தளங்கள், தொலைக்காட்சி, திரையரங்கம் போன்ற இடங்களில் காட்சிப்படுத்தப்படும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1. 2018–2019ஆம் ஆண்டிற்கான 'DigiDhan Mission Fintech' விருதை வென்ற நிறுவனம் எது?**

A) PayTM

**B) BharatPe ☑**

C) PhonePe

D) MobiKwik

✓ தில்லியில் நடந்த MeitY துளிர் நிறுவனங்கள் உச்சிமாநாட்டில் 'வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தின் மூலம் டிஜிட்டல் கொடுப்பனவுகளில் புதுமை' என்னும் 'DigiDhan Mission Fintech' விருதை பாரத்பே வென்றுள்ளது. இந்தியாவில் டிஜிட்டல் கட்டணத்தை ஊக்குவிப்பதே இவ்விருதின் நோக்கமாகும். இந்த விருதை மத்திய தகவல் தொடர்பு, மின்னனு & தகவல் தொழில்நுட்பம் மற்றும் சட்டம் & நீதித்துறை அமைச்சர் இரவிசங்கர் பிரசாத் வழங்கினார்.

**2. 4 இலட்சம் அகல்விளக்குகளை ஏற்றி, உலக கின்னஸ் சாதனை படைத்த இந்திய நகரம் எது?**



A) இலக்னோ

**B) அயோத்தியா ☑**

C) போபால்

D) ஜெய்ப்பூர்

✓ தீபாவளிப் பண்டிகையின் ஒருபகுதியாக இந்திய நகரமான அயோத்தி கின்னஸ் உலக சாதனை படைத்தது. சரயு ஆற்றின் கரையில் 409,000 அகல்விளக்குகள் ஏற்றியதைக் கண்ட கின்னஸ் உலக சாதனைகளின் பிரதிநிதிகள் உத்தரபிரதேச மாநிலத்தின் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத்திடம் கின்னஸ் உலக சாதனைக்கான சான்றிதழை வழங்கினர்.

✓ கடந்த ஆண்டின் பண்டிகையின்போது 300,150 அகல்விளக்குகளை ஏற்றி சாதனை படைக்கப்பட்டது. ஹிந்துக்கள் தங்களின் பிரதான தெய்வமான ஸ்ரீராமர், அயோத்தியில் பிறந்ததாக நம்புகின்றனர். 14 ஆண்டுகள் வனவாசத்துக்குப் பின்னர் அவர் நாடுதிரும்பிய அந்நன்னாளைக் கொண்டாடும் பொருட்டு, மக்கள் அகல்விளக்குகளை ஏற்றுகின்றனர்.

**3. 2019 அக்டோபரில், 'மகாரத்னா' தகுதி கிடைக்கப்பெற்ற இரண்டு நிறுவனங்கள் எவை?**

A) BHEL மற்றும் பவர் கிரிட் கார்ப்பரேசன்

**B) HPCL மற்றும் பவர் கிரிட் கார்ப்பரேசன் ☑**

C) BHEL மற்றும் HPCL

D) GAIL மற்றும் HPCL

- ✓ அக்.23 அன்று, கனரக தொழிற்சாலை மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் அமைச்சகத்தின்கீழ் உள்ள பொதுத்துறை நிறுவனங்கள் துறையானது, அரசுக்கு சொந்தமான ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிட் மற்றும் பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிட் ஆகிய இரு பொதுத்துறை நிறுவனங்களுக்கு 'மகாரத்னா' தகுதியை வழங்கியது.

- ✓ இதன்மூலம் இவ்விரு பொதுத்துறை நிறுவனங்களும் இப்போது தன்னாட்சி நிலையுடன் செயல்படும். மேலும், நிதிசார்ந்த முடிவுகளை இந்நிறுவனங்களே எடுக்க முடியும். 'மகாரத்னா' தகுதியை பெற்றுள்ள ஒரு பொதுத்துறை நிறுவனத்தால் சொத்துக்களை பிற நிறுவனங்களுக்கு மாற்றமுடியும், புதிய பங்குகளை வாங்க முடியும் மற்றும் அதன் துணைநிறுவனங்களின் பங்குகளை விலக்கிக் கொள்ளவும் முடியும்

**4. அண்மையில் தனது 58ஆவது எழுச்சி நாளை கொண்டாடிய மத்திய காவல்படை எது?**

A) எல்லைக் காவல்படை

B) சசத்ர சீமா பால்

C) மத்திய சேமக்காவல் படை

**D) இந்திய – திபெத்திய எல்லைக்காவல்படை ☑**

- ✓ 58ஆவது இந்தோ–திபெத்திய எல்லைக் காவல்படையின் எழுச்சிநாளானது கடந்த அக்.24 அன்று கொண்டாடப்பட்டது. இது இலடாக் பகுதியிலுள்ள கரகோரம் கணவாய் முதல் அருணாசல பிரதேசம் ஜசிப்லா வரையுள்ள 3488 கி.மீ., இந்திய–சீன எல்லையைப் பாதுகாக்கிறது. பனிப்புயல், பனிப்பாறை சரிவுகள், நிலச்சரிவுகள் போன்ற இயற்கை சீற்றங்களுடன் –40℃ வெப்பநிலையிலும் 9000–18000 அடி உயரத்திலும் எல்லையைக் காக்கிறார்கள்.

- ✓ இந்திய–திபெத் எல்லைக் காவல்படையானது 1962 அக்.24 அன்று மத்திய சேமக்காவல் படைச்சட்டம் மூலம் உருவாக்கப்பட்டது. பின்னர் இந்திய–திபெத் எல்லைக் காவல்படைச் சட்டம் உருவாக்கப்பட்டு 1994 முதல் மறுவரையறை செய்யப்பட்டது.

**5. சமீபத்தில், 6 புதிய மருத்துவக்கல்லூரிகளை நிறுவுவதற்கான தமிழ்நாட்டின் கோரிக்கைக்கு மத்திய அரசு இறுதி ஒப்புதல் அளித்துள்ளது. பின்வருவனவற்றில் இந்தப் புதிய மருத்துவக் கல்லூரிகள் அமையப்பெறாத இடம் எது?**

A) திருப்பூர்

B) இராமநாதபுரம்

C) திண்டுக்கல்

**D) சிவகங்கை ☑**

- ✓ 6 புதிய மருத்துவக்கல்லூரிகளை நிறுவுவதற்கான தமிழ்நாட்டின் கோரிக்கைக்கு மத்திய சுகாதார & குடும்பநல அமைச்சகம் இறுதி ஒப்புதல் அளித்துள்ளது. திருப்பூர், நீலகிரி, இராமநாதபுரம், நாமக்கல், திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் ₹1,950 கோடி செலவில் இந்தக் கல்லூரிகள் அமைக்கப்பட்டு, இந்த மாவட்டங்களில் தற்போதுள்ள மருத்துவமனைகளுடன் இணைக்கப்படும்.

- ✓ இந்தப் புதிய மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதற்கான 60% நிதியுதவியை மத்திய அரசும் 40% நிதியுதவியை மாநில அரசும் பகிர்ந்து வழங்கும். அதன்படி ₹1,170 கோடி ரூபாயை மத்திய அரசும் ₹780 கோடி ரூபாயை மாநில அரசும் வழங்கும். இந்த மருத்துவக்கல்லூரிகள் ஒவ்வொன்றும் ₹325 கோடி செலவில் அமைக்கப்படும் என தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.
- ✓ இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை முப்பதாக உயரும். தற்போது வரை தமிழ்நாட்டில் 24 அரசு மருத்துவக்கல்லூரிகளும் 3750 மருத்துவ இடங்களும் உள்ளன.

**6. சமீபத்தில் காலமான ஐ.நா அகதிகள் அமைப்பின் முதல் பெண் தலைவர் சடாகோ ஒகாடா, எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?**

A) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA)

B) நியூசிலாந்து

**C) ஜப்பான் ☑**

D) பிரான்ஸ்



- ✓ ஐநா அகதிகள் அமைப்புக்கு (UNHCR) தலைமைதாங்கிய முதல் பெண்மணியான ஜப்பானின் சடாகோ ஒகாடா (92), அக்டோபர்.29 அன்று காலமானார். அவர் 1991–2000 வரை ஐநா அகதிகள் அமைப்பின் உயராணையராக பணியாற்றினார். 2003–2012 வரை ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு அமைப்பின் (JICA) தலைவராகவும், 1978–1979 வரை ஐ.நா சிறார்கள் நிதியத்தின் (UNICEF) தலைவராகவும் பணியாற்றினார்.

**7. ஈராக்கிற்கான புதிய இந்திய தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

A) P S சாவ்லா

B) பியூஷ் அகர்வால்

**C) பிரேந்தர் சிங் யாதவ் ☑**

D) முக்தேஷ்குமார் பரதேசி



- ✓ ஈராக்கிற்கான இந்தியாவின் அடுத்த தூதராக பிரேந்தர் சிங் IFS யாதவ் நியமிக்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது. இதற்கிடையில், சமோவாவுக்கான இந்தியாவின் அடுத்த உயராணையராக முக்தேஷ்குமார் பரதேசி IFS நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே நியூசிலாந்தின் தூதராக பணியாற்றிவரும் பரதேசி, சமோவாவின் அடுத்த உயராணையராகவும் பணியாற்றுவார்.

**8. அண்மையில் காலமான Sequoia Capital'இன் நிறுவனர் டான் வாலண்டைன், எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?**

**A) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) ☑**

B) நியூசிலாந்து

C) ஜப்பான்

D) பிரான்ஸ்



✓ அமெரிக்காவில் அமைந்துள்ள Sequoia Capital'இன் நிறுவனர் டான் வாலண்டைன் (87), அக்.26 அன்று கலிபோர்னியாவில் காலமானார்.

**9.அண்மையில் காலமான இந்தியாவின் வயதான யோகா ஆசிரியை V நானம்மாள், எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?**



**A) தமிழ்நாடு ☑**

B) கேரளா

C) கர்நாடகா

D) ஆந்திர பிரதேசம்

✓ 2018ஆம் ஆண்டில், 'பத்மஸ்ரீ' விருதுபெற்ற கோயம்புத்தூரைச் சேர்ந்த 'யோகா பாட்டி' நானம்மாள் (99) அக்டோபர்.26 அன்று காலமானார்.

**10.இந்தியாவின் 47ஆவது தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



A) ஜஸ்தி செல்லமேஸ்வர்

B) அனிருத்தா போஸ்

**C) சரத் அரவிந்த் போப்டே ☑**

D) மதன் லோகூர்

✓ உச்சநீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதியாக சரத் அரவிந்த் போப்டே (63) நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான ஒப்புதலை குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் வழங்கியுள்ளதாக மத்திய சட்ட அமைச்சகம் தெரிவித்துள்ளது. உச்சநீதிமன்றத்தின் 47ஆவது நீதிபதியாக S A போப்டே, நவ.18 அன்று பதவியேற்கவிருக்கிறார். தற்போதைய தலைமை நீதிபதி இரஞ்சன் கோகோய், 46ஆவது தலைமை நீதிபதியாகக் கடந்த 2018 அக்.3 அன்று பதவியேற்றார். அவரது பதவிக்காலம் நவ.17ஆம் தேதியுடன் நிறைவடைகிறது.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ இந்தியா – சீனா இடையிலான இருதரப்பு உறவுகளையும், சுற்றுலாவையும் மேம்படுத்தும் நோக்குடன் காஞ்சிபுரத்தில் போதி தர்மருக்கு பிரமாண்ட சிலையமைக்கவும், பௌத்த மதத்துடன் தொடர்புடைய ஆறு தமிழ்நாட்டு நகரங்களை (காஞ்சிபுரம், மாமல்லபுரம், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் உட்பட) இணைத்து சுற்றுலா வளையம் அமைக்கவும் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.